DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.320/12

Deposition of Witness: PW 7

| | |
|---|---|
| Name சாந்தாலட்சுமி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 24.3.2011 ம் தேதி 14.30 மணிக்கு நான் நிலையப்பொறுப்பில் இருந்த போது டிசிபி சி.சா.ஆய்வாளர் மூக்கையா நிலைய குற்ற எண்.22/11 இதசபிரிவுகள் 419, 465, 468, 471, 420, 120(பி), ன் கீழ் வழக்கு பதிவு செய்து மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். நான் வழக்கை பார்வையிட்டு சாட்சிகள் கருப்பசாமி, ஈஸ்வரன், சுரேஷ், வேலுச்சாமி, செல்லையா, சி.சாஆ.மூக்கையா, வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடி அம்மையாச்சாபுரம், வீரபாண்டி ஆகிய இடங்களில் தேடி சீலையம்பட்டி பஸ்டாப்பில் வைத்து எதிரி பாண்டியராஜன் , 24.3.11 ம் தேதி 16 மணிக்கு கைது செய்து 17 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வாதியிடம் இருந்து பெறப்பட்ட தமிழ்நாடு அரசு நிலஉடைமை பதிவேட்டின் உண்மை நகல். நிலவரிரசீது எண்.898188 . தேதி 28.4.05, நிலவரிரசீது எண்.807797. தேதி 21.3.11. பட்டா எண்.68 கிராமகணக்கு பதிவேட்டின் உண்மை நகல். பட்டா 71 க்கான சிட்டா 24.3.11 ம் தேதி. ஆண்டிபட்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு எண்.1400/1951 , அம்மச்சி இறப்பு சான்றிதழ் , அம்மச்சி வாரிசு சான்று,கிரய பத்திரம் ஆண்டிபட்டி சார்பதிவாளர் 3304/2010, குடும்ப அடையாள அட்டை 23/G0149822. அதன்பின்பு விசாரணையை முடித்து எதிரி மீது 30.4.12 ம் தேதி மேற்கண்ட பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.